வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 30.12.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 364 | பக்கங்கள் : 08

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் சிறப்பு கொள்கை!

## இந்திய ஊடகத்தில் வலியுறுத்தல்

சென்னை, டிசெ. 30

**தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சிறப்பு கொள்கை தேவைப்படுவதாக வலியுறுத்தப்பட்டுள்ளது. தி ஹிந்து செய்தித்தாளில் இது தொடர்பாக வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்திய சட்டப்படி தற்போது, பெற்றோரில் ஒருவர் "சட்டவிரோத குடியேறி" என வகைப்படுத்தப்பட்டால், குழந் தையும் அதே நிலைக்குத்தள்ளப்படுகிறார்.**

இதனால் குடியுரிமை, வாக்கா ளர் பட்டியல் சேர்ப்பு போன்ற அடி ப்படை உரிமைகள் பாதிக்கப்படு கின்றன.

இந்தநிலையில், திருவண்ணா மலை மாவட்டத்தில் அகதிகளுக் கான வீடுகள் மற்றும் வசதிகளைத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்.

இதனையடுத்து, அங்குள்ள இல ங்கை அகதிகள், மனிதாபிமான சட்ட அமைப்பு, மத்திய-மாநில ஒருங்கிணைந்த நடவடிக்கை மற் றும் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றைக் கோருகின் றனர்.

அத்துடன், இந்தியா - இலங்கை ஒப்பந்தங்களின் வரலாற்றுப் பின்ன ணியைக் கருத்தில் கொண்டு, ஏதிலி கள் மீள்குடியேற்றத்துக்கு தனித்து வமான கொள்கை அவசியம் என் றும் இலங்கை அகதிகள் கோருவ தாக தி ஹிந்து கூறுகிறது.

(அ)

# டக்ளஸின் உயிருக்கு ஆபத்து பாதுகாப்பு வழங்க அழுத்தம்!

## வடக்கு முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன்



கொழும்பு, டிசெ. 30

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிர் ஆபத் துக்களை எதிர்கொண்ட ஒருவரா வார். அவருக்கான பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண் டும் என சுதந்திரக் கட்சி யின் அரசியல் குழு உறுப் பினரும் வடக்கு மாகாண

07

# யாழ். சர்வதேச மைதானக் கட்டுமானம் டித்வா புயலின் பின் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 30

யாழ்ப்பாணம், மண்டைதீவு பகுதியில் அமையவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி தற்பொ ழுது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

07

# தற்போது உள்ளதைவிட கடுமையானது அநுரவின் அரசை பாதுகாக்கும் சட்டம்!

## முன்னிலை சோசலிசக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 30

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பய ங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதா கக் கூறி ஆட்சிக்கு வந்துவிட்டு, தற்போது அதைவிடக் கடுமையான பயங்கரவாதத் திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவரத் தயாராகி வருவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜகொட குற்றம் சாட் டியுள்ளார்.

நுகேகொடையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப் பிட்டார்.

இந்த புதிய சட்டத்தின் கீழ்,

07

# முன்னாள் அமைச்சர்கள் உட்பட 120 இற்கும் மேற்பட்டோர் கைது!

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, டிசெ. 30

கடந்த 11 மாதங்களில் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 120 இற்கும் மேற்பட்டோர் இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களில் கைது செய்து செய்யப்ப ட்டுள்ளனர்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் 2025 ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கைகளில் இது சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் ஊழலை ஒழிப்பதற்காக முன்னெ டுக்கப்பட்ட நடவடிக்கைகள் பெரும் வேகமெடுத்துள்ளதாக

07

# வெசாக் தினத்தால் குழப்பம்!

கொழும்பு, டிசெ. 30

2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டு பூரணை தினங்கள் வரு வதால், அவற்றில் எதனை வெசாக் தினமாக அறி விப்பது என்பது குறித்து பௌத்த

07

# டித்வா குறித்து முன்னெச்சரிக்கை இல்லை; அரசுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு!

## சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் திட்டம்

கொழும்பு, டிசெ.30

டித்வா சூறாவளி குறி த்து உரிய நேரத்தில் எச் சரிக்கை விடுக்கத் தவறி யமைக்காக அரசாங்கத் திற்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் சுதந்திர சட்டத்தரணி கள் சங்கம், உயர்நீதிமன் றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளது.

டித்வா சூறாவளியின் ஆபத்துகள் குறித்து முன்கூட்டியே பொது மக்களுக்குத் தெரிவிக்கத் தவறியமை மற்றும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமை ஆகிய வற்றுக்காக

07

# தமிழகத்தின் அடுத்த கட்ட உதவி; வருகின்றது 5 ஆவது கொள்கலன்!

சென்னை, டிசெ. 30

இலங்கையில் அண்மையில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, தமிழகத்திலிருந்து அடுத்த வாரத்தில் மற்றுமொரு நிவாரண கொள்கலன் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகம் இதனை தெரிவித்தது.

அதிதீவிர வானிலை காரணமாகப் பாதிக்கப் பட்ட மக்களுக்காக, தமிழகத்திலிருந்து இது வரை 4 கொள்கலன்கள் அனுப்பி

07

# மத்தள விமான நிலையத்தில் புறப்பாடு வரி நேற்று நீக்கம்!

கொழும்பு, டிசெ. 30

மத்தள சர்வதேச விமான நிலையம் வழியாக பயணிக் கும் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட புறப்பாடு வரியை நேற்று முதல் அரசாங்கம் நீக்கியுள்ளது.

மத்தள விமான நிலையம் வழியாக நாட்டிலிருந்து புறப்படும் பயணிகளுக்கு இனி 60 டொலர் புறப்பாடு வரி வசூலிக்கப்படாது என்பதை நிதி அமைச்சு ஒரு சிறப்பு சுற்றறிக்கை மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த சலுகை அடுத்த ஆண்டு ஜூன் 26 வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

07

# 131 கிலோ கிராம் கஞ்சா பன்னங்கண்டியில் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில், பாழடைந்த வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 131 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக இந்த நடவடி க்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பன்னங்கண்டி பகுதியைச் சேர் ந்த, 39 வயதான நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில், மாவட்ட குற்றத்

07

# பல்கலை ஆசிரியர் சங்கங்கள் ஒருநாள் அடையாள போராட்டம்!

கொழும்பு, டிசெ. 30

அரசாங்கத்தினால் அண்மையில் முன்வைக்கப்பட் டுள்ள பல்கலைக்கழக சட்டத்திருத்தத்தில் காணப்படும் முரண்பாடுகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் அனுப்பிய இரண்டு கடிதங்களை உடனடியாகத் திரும்பப்பெறக் கோரியும், அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் இன்று ஒருநாள் அடையாள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

குறிப்பாக பீடாதிபதி மற்றும் திணைக்களத்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர்கோவில் மேற்கு மீனவர்கள் சிலர் பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்பு!

## படகு வழங்கலில் முறைகேடு என குற்றம்சாட்டி



யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்துக்கு உட்பட்ட சங்க உறுப்பினர்கள் நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாளையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு கடல் தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட அனைத்து துணைச் சங்கங்களுக்கும் தலா இரண்டு படகுகள் வெளி இணைப்பு இயந்திரத்துடன் இலவசமாக வழங்கப்பட்டன.

அந்தப் படகுகள் சமாச நிர்வாகத்தினர் முன்பாக கலந்துரையாடலின் மூலம் தெரிவு செய்து வழங்கப்பட்டு வந்தன.

இந்த படகு வழங்கலில் முறைகேடு நடைபெற்று இருப்பதாக அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கின் பல சங்கங்களின் பிரதிநிதிகள் தொடர் குற்றச்சாட்டை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு இருப்பதாக வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு மக்கள் சிலர் பிரதேச செயலகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்-

தாளையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்துக்கு வழங்கப்பட்ட இரு படகுகள் தொடர்பில் முறைகேடு நடந்துள்ளது. இது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இரு படகுகளையும் நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கம் ஏலத்தில் விற்றுவிட்டு அதன் பெறுமதியான 18 இலட்சம் ரூபாவை பக்கச் சார்பாக ஒரு சிலருக்கு மட்டும் பகிர்ந்தளித்துள்ளனர்.

இது தொடர்பாக சங்க அங்கத்தவர்கள் எங்களுக்கு அறிவிக்கவில்லை.இது மாபெரும் மோசடி. இதற்கு சமாசமும் துணை போயுள்ளது.


மீள் குடியேறிய காலத்திலிருந்து இதுவரை எமக்கு எந்த வித கொடுப்பனவும் கிடைக்கவில்லை.

மக்கள் எல்லோருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட படகை விற்பனை செய்துவிட்டு அதன் தொகையை ஒரு சிலருக்கு மட்டும் பகிர்ந்து கொடுத்துள்ளமை நாகர்கோவில் கடற்தொழிலாளர் சங்கத்தின் மிக மோசமான செயல். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்திருக்கிறோம். பிரதேச செயலருக்கும் கடிதம் ஒன்றை கையளிக்கிறோம். உரியவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு எமக்கு நீதியை பெற்றுத் தர வேண்டும்-என்றனர்.

இதன்போது போராட்டக்காரர்களை சந்தித்து, வழங்கப்பட்ட கடிதத்திற்கு உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு விரைவில் தீர்வு வழங்குவதாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் உறுதியளித்தார். (அ-02)

# முல்லைத்தீவு சிறுமி உயிரிழப்பில் சந்தேகம் வைத்தியசாலையை முற்றுகையிட்ட மக்கள்!



முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்னும் சிறுமி அண்மையில் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் இவ்வாறு சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை நுழைவாயிலை முற்றுகையிட்டு பெருந்திரளான மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுமி டினோஜாவின் மரணத்திற்கு நீதியைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரும் வகையிலான வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வைத்தியசாலைப் பணிப்பாளரை குறித்த இடத்திற்கு வரவழைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறுமியின் மரணம் தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன், குறித்த மரணத்திற்கு நீதி கிடைக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

குறித்த சிறுமியின் சந்தேகத்திற்கிடமான மரணத்திற்கு நீதியைப் பெற்றுத்தருமாறு கோரி இதன்போது மக்களால் மகஜர்களும் கைளிக்கப்பட்டன. (அ)

# முறிகண்டியில் ஒளிவிழா

கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி முறிகண்டி தென்னிந்திய திருச்சபையின் ஒய்வுநாள் பாடசாலை மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் திருச்சபை குருமுதல்வர் எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் ஒய்வுநாள் பாடசாலை மாணவர்கள், புனித பவுல் சிறுவர் அபிவிருத்தி நிலைய மாணவர்கள் உள்ளிட்ட பலரின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட 70 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் பிரதித் தலைவர் செபஸ்ரியன் அன்ரனி, தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீன சிரேஸ்ட ஊழியர் இ. ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# 84 வீதமானவர்களுக்கு கிடைத்தது 25,000 ரூபா!

கொழும்பு, டிசெ. 30

சமீபத்தில் ஏற்பட்ட பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களில் 84 வீதமானவர்களுக்கு 25,000 ரூபா உதவித்தொகை கிடைத்துள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இதுவரை உதவித்தொகை கிடைக்காத நபர்கள் தங்களுக்குரிய பிரதேச செய லகங்களைத் தொடர்பு கொள்ள முடியும் என தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மையத்தின் உதவிச் செயலாளர் ஜெயதிசி முனசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு பேரிடரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 15,000 ரூபா உதவித்தொகை வழங்குவது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# ஒளி விழாவும் பரிசளிப்பும்



யாழ்ப்பாணம், டிசெ. 30

சுதந்திர மனித உரிமை கள் அமைப்பின் ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை அமைப்பின் வடமாகாண இணைப்பாளர் கலாநிதி கி. புண்ணி யமூர்த்தி தலைமையில் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இரா.மதிகரன், கல்வித்துறை பொறுப்பாளர் ஜோசப்பாலா, முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ சிங்கம், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய எம்.ஷாந்தன் சத்தியசீர்த்தி மற்றும் இந்து, கிறிஸ்தவ குருமாரும் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட கையெழுத்து சஞ்சிகைப் போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்களும் வழங்கப்பட்டன. கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)

# கிளீன் சிறீலங்கா நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மன்னார் செயலகத்தில் நடமாடும் சேவை

மன்னார், டிசெ. 30

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டமான கிளீன் சிறீ லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேட நடமாடும் வேலைத்திட்டம் நேற்று காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்களுக்கு பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க,பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆரம்ப நிகழ்வாக தூய்மையான இலங்கை, பிரஜா சக்தி, தேசிய ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

அதனை தொடர்ந்து ஹிம் கம வேலைத்திட்டத்தின் கீழ் காணி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாந்தை மேற்கு, நானாட்டான் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 99 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

மேலும் டித்வா சூறாவளி மற்றும் வெள்ள பாதிப்புக்களினால் ஏற்பட்ட இழப்புகளுக்கான அரசாங்கத்தினால் வழங்கப்படும் நட்டஈடு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இதன்போது கால்நடை வளர்ப்பாளர்கள் 10 பேருக்கும், விவசாய செய்கையாளர்கள் 09 பேருக்கும்,மேட்டு நில பயிர் செய்கையாளர்கள் 11 பேருக்கு இவ்வாறு இழப்பீடுகள் வழங்கப்பட்டன. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.12.2023 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இது ஆரோக்கியமற்ற அரசியல்

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கடந்த வாரம் சந்தித்திருந்தனர். இந்த சந்திப்பின் போது தொடர்ந்தும் பிற்போடப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், இதனை புதுடில்லி கொழும்புக்கு வலியுறுத்தவேண்டும் என்னும் கோரிக்கையை அனைத்து கட்சிகளும் முன்வைத்திருந்தன.

மாகாண சபைத் தேர்தலைக்கூட நடத்துங்கள் என்று அரசாங்கத்தின் மீது உள்நாட்டளவில் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாத நிலையில்தான் தமிழ் கட்சிகள் இருக்கின்றன. இதன் காரணமாகவே இந்தியாவிடம் தயவை நாடவேண்டியிருக்கின்றது. இல்லாவிட்டால் இந்தியா இந்த விடயத்தில் தேவையில்லை. மாகாண சபைத் தேர்தலை வையுங்கள் என்னும் தமிழ்க் கட்சிகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கே இன்னொரு நாட்டின் தயவு தேவைப்படும்போது, தமிழ்க் கட்சிகளால் எவ்வாறு சமஷ்டியை அடையமுடியும்? ஆனால் தற்போது ஜெய்சங்கரிடம் யார் சமஷ்டியை வலியுறுத்தியது - வலியுறுத்தவில்லை என்னும் அடிப்படையில் பொதுவெளிகளில் விவாதிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தை ஆரம்பித்து வைத்தவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தான். தான் மட்டுமே, சமஷ்டியை வலியுறுத்தியதாகவும் மற்றவர்கள் எவரும் அதனை வலியுறுத்தவில்லை என்னும் அடிப்படையில் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். சந்திப்பு இடம்பெற்று வெளியில் வந்த உடனேயே மிகவும் அவசரமாக இந்தக் கருத்தை தெரிவிக்க வேண்டிய எந்தவொரு தேவையும் இருந்திருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து ஜெய்சங்கரிடம் பேசப்பட்ட விடயங்கள் என்ன என்னும் உரையாடலொன்று இடம்பெற்றது. கஜேந்திரகுமார் தொடர்ந்தும் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்துவந்த நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தற்போது பதிலளித்திருக்கின்றார். அதவாது, கஜேந்திரகுமார் பொய்யுரைப்பதாகவும் நாகரிகமற்ற வகையில் நடந்து கொள்வதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

சந்திப்பில் பங்குகொண்டிருந்த ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளின் தலைவர்களுடன் ஈழநாடு தொடர்பு கொண்டு விடயங்களை உறுதிப்படுத்தியிருக்கின்றது. புதிய அரசியல் யாப்பு வரும் பட்சத்தில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுதான் தங்களுடைய நிலைப்பாடு என்பதை சி.வி.கே. சிவஞானம் அழுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ்க் கட்சிகள் ஒரு குடையின் கீழ் நிற்கவேண்டும் அப்போதுதான் புதுடில்லியால் சில விடயங்களை வலியுறுத்த முடியும் என்னும் அடிப்படையில்தான் இந்தியாவின் அணுகுமுறை அமைந்திருக்கின்றது. ஆனால் தமிழ்க் கட்சிகளோ மீண்டும், மீண்டும் ஒரே தவறையே செய்து வருகின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சருடான சந்திப்பின் பின்னர், அந்த சந்திப்பை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு பொது வெளிகளில் வார்த்தைகளால் மோதிக் கொள்வதானது புதுடில்லிக்கு எரிச்சலூட்டக் கூடிய விடயங்களாகவே இருக்கும். கஜேந்திரகுமார் இந்த விடயத்தில் எதிர்க்கட்சி அரசியல் மனோபாவத்துடன் விடயங்களை கையாள முற்படுவது தவறானது. முதலில் இவ்வாறான உயர்மட்ட இராஜதந்திர சந்திப்புக்களின் பின்னர் ஊடகங்களுக்கு தீனி போடும் அடிப்படையில் பேசுவதை கட்சிகளின் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

ஒரு உயர்மட்ட இராஜதந்திர சந்திப்பின்போது உரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தங்களுக்குள் மோதிக் கொள்ளும் கட்சிகளை நம்பி எந்த அடிப்படையில் இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு தலையீடுகளைச் செய்ய முடியும்? தமிழ்த் தேசியத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் அரசியல் உரையாடல்கள் அனைத்தும் மீண்டும் ஒரு கேள்வியில்தான் சந்திக்கின்றது. அதாவது, ஈழத் தமிழர் சார்பில் அரசியலை முன்னெடுக்கும் தகுதியோடுதான் இந்தக் கட்சிகள் இருக்கின்றனவா?

## போதைப்பொருள் சந்தேக நபர்களை விடுவித்த பொலிஸ் உயர் அதிகாரிகள் குறித்து விசாரணை

கொழும்பு, டிசெ. 30

போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்க தலையிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழு குறித்து சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் ஒருவரும், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் அடங்குவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் தாங்களாகவே தங்கள் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கியதாக அறிக்கை மேலும் கூறுகிறது.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் அறிவுறுத்தல்களின் பேரில், அவரது கட்டளையின் கீழ் உள்ள சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே இது தொடர்பான முதற்கட்ட விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக, சந்தேக நபர்களை முதலில் கைது செய்த அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட உள்ளன.

மேலும் சிரேஷ்ட அதிகாரிகள், அவர்களின் விடுதலையைப் பெறுவதற்கு எவ்வாறு தலையிட்டனர் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

## ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் டிஜிற்றல் மயமாகின!

கொழும்பு, டிசெ. 30

ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் கீழ், நிறுவனங்கள் மற்றும் உறுப்பினர்களை இணையவழியில் பதிவு செய்யும் திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று முதல் இச்சேவைகள் இணையவழியில் முன்னெடுக்கப்படும் என தொழிலாளர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று தொழிலாளர் அமைச்சின் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொழிலாளர் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, தொழிலாளர் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

## விசேட அனுமதி தவிர்ந்து ஏனைய நேரங்களில் மரக்கறிகள் இறக்குமதி செய்யப்படமாட்டாது

கொழும்பு, டிசெ. 30

விசேட அனுமதி தவிர்ந்து, ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரக்கறிகள் இறக்குமதி செய்யப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, விமான சேவை போன்ற சில நிறுவனங்களுக்கு குளிரூட்டப்பட்ட மரக்கறிகளை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதியை தவிர, வேறு எந்த தரப்பினருக்கும் அனு மதி வழங்கப்படவில்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது.

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க இந்த விடயத்தை தெரிவித்தார்.

முன்னதாக, டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களை அரசாங்கம் தங்களுக்கு சாதகமான பயன்படுத்தி, மரக்கறியை இறக்குமதி செய்வதாக தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பு குற்றம் சுமத்தியிருந்தது.

தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

நுவரெலியா, கண்டி, பண்டாரவளை, பதுளை மற்றும் மாத்தளை உள்ளிட்ட சில முக்கிய பிரதேசங்களில் போதுமான மரக்கறி செய்கை முன்னெடுக்கப்படுகிறது.

இருப்பினும், பண்டிகைக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறையை காரணம் காட்டி, மரக்கறியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தனிப்பட்ட இலாபத்தை நோக்கமாகக்கொண்டு, மரக்கறியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தகம் அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த நடவடிக்கை தொடருமாயின், இறுதியில் உள்ளூர் மரக்கறி செய்கை வீழ்ச்சியடையும் என தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் எச்சரித்துள்ளார்.


இந்த நிலையில், இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவை தொடர்பு கொண்டு கேட்டபோது,

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரக்கறிகள் இறக்குமதி செய்யவதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக நாட்டின் வடக்கு முதல் தெற்கு வரையான விவசாயம் காணிகள் பாதிக்கப்பட்டன. இருப்பினும், வயல்கள் உள்ளிட்ட சில விவசாய காணிகள் மீண்டும் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளன.

இதன்காரணமாக, குளிரூட்டப்பட்ட மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அவசியமில்லை என்று தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசெம்பர் - 30 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - மார்கழி 15
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
வீண் செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்கு வாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**இடபம்**
யதார்த்தமாகப் பேசிகவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். புகழ் கூடும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும். லாபம் வரும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர். நியாயத்தை பேசப் போய் பெயரை கெடுக்க யாரையும் எளிதில் நம்பாதீர்கள்.

**கன்னி**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள். வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்புவட்டம் விரியும். கனவு நனவாகும்

**தனுசு**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புது வேலை அமையும்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கி இருந்த பணத்தை திருப்தி


**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். பொறுமை நாள்.

# வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியகத்துக்கு புதிய தலைவர் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் புதிய தலைவராக சுற்றுலா அபிவிருத்தி ஆலோசகராக பணியாற்றும் கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை ஆளுநர் கையளித்தார். இதன்போது, ஆளுநரின் செயலாளர் எஸ். சத்தியசீலனும் கலந்து கொண்டார்.



வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் தலைவராக இருந்த அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில் புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# மன்னார் நீதிமன்றம் முன் துப்பாக்கிச்சூடு: பிரதான சந்தேகநபர் உட்பட இருவர் கைது

மன்னார், டிசெ. 30

கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்துக்கு முன்னால் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேகநபர் மற்றும் அதற்கு உதவியளித்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் வீதியிலுள்ள விடுதி ஒன்றில் மறைந்திருந்த போது நேற்று முன்தினம் இந்த இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்கள் உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 38 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கிடைத்த தகவலுக்கமைய, மன்னார் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவும் மன்னார் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினரும் இணைந்து இவர்களை கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சாவகச்சேரியில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




யாழ்ப்பாணம், டிசெ. 30

சாவகச்சேரி- மகிளங்கேணி கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கனடாவில் வசிக்கும் மனித நேய சமூக செயல்பாட்டாளரான காமலிற்றாவால் வழங்கப்பட்ட நிதியில் 5ஆவது ஆண்டில் காலடி வைக்கும் பிரீத்தி அறக்கட்டளையின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" எனும் செயல்திட்டத்தின் கீழ் இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-05)

# 3 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

நெடுந்தீவு, டிசெ. 30

நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 3 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டு கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் பயணித்த படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஊர்காவற்றுறை நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது, அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# "பாடசாலை நேரத்தை நீடிப்பது மாணவர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் முறையற்ற செயல்பாடு"

கொழும்பு, டிசெ. 30

பாடசாலை நேரத்தை நீடிப்பது முறையற்றது எனவும் இது மாணவர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் செயல்பாடு எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டில் தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்காக அரசாங்கம் புதிய கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இது ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தாலும் தற்போது ஜனவரி 22 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிப்பது முறையற்றது மற்றும் மாணவர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் செயல்பாடாகும்.

எனவே, பாடசாலை நேரத்தை மீண்டும் பிற்பகல் 01.30 வரை குறைக்க வேண்டும்.

புதிய கால அட்டவணையின்படி முஸ்லிம் பாடசாலைகள் காலை 07.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

போக்குவரத்து வசதிகள் பெரும்பாலும் 07.30 மணிக்கே சீராக இருக்கும் நிலையில், இது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற நிலையில்!

கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் பல நகர்ப்புறங்களில் காற்றின் தரம் சற்று ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அண்மைய தரவுகளின் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னதாக யாழ்ப்பாணம் மற்றும் புத்தளத்தில் ஆரோக்கியமற்ற அளவுகள் பதிவாகின.

அங்கு காற்றின் தரக் குறியீடு மதிப்புகள் முறையே 92 மற்றும் 100 ஐ எட்டின.

அடுத்த 24 மணிநேரத்திற்கான முன்னறிவிப்புகள் நாடு முழுவதும் காற்றின் தரக் குறியீடு அளவுகள் 48 முதல் 112 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகள் மிதமான காற்றின் தரம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் ஆகியவை 100-108 மற்றும் 104-112 இற்கு இடையில் காற்றின் தரக் குறியீடு மதிப்புகளை கொண்டிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த பகுதிகள் "சற்று ஆரோக்கியமற்ற" பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

மொனராகலை சிறந்த காற்றின் தரத்தைப் பதிவு செய்தது - அங்கு காற்றின் தரக் குறியீடு 46 ஆக இருந்தது. (அ)

# கொழும்பு கோட்டை - சிலாபம் ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த ரயில் பாதைகளின் திருத்தப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் புத்தளம் ரயில் பாதையில் கொழும்பு கோட்டை மற்றும் சிலாபம் இடையிலான ரயில் சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளம் ரயில் பாதையில் குடாவெவ மற்றும் மாதம்பே ரயில் நிலையங்களுக்கு இடையே அமைந்துள்ள கடுபிட்டி ஓயா பாலத்திற்கு அருகில் ரயில் பாதை நீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக கொழும்பு கோட்டை மற்றும் சிலாபம்-புத்தளம் இடையிலான ரயில் சேவைகள் ஸ்தம்பித்திருந்தன.

இதன் விளைவாக, சிலாபம் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 ரயில் பெட்டிகளை போக்குவரத்துக்காகப் பயன்படுத்த முடியாமல்போனதுடன், அந்த பாதையில் ரயில் சேவைகள் நாத்தாண்டியா ரயில் நிலையம் வரை மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுங்க வருவாயில் புதிய மைல்கல்!

கொழும்பு, டிசெ. 30

2025 ஆம் ஆண்டில் நேற்று வரை இலங்கை சுங்கத் திணைக்களம் 2,497 பில்லியன் ரூபாவை வரலாற்று சிறப்புமிக்க வருவாயாகப் பதிவு செய்துள்ளது.

இது அதன் திருத்தப்பட்ட ஆண்டு இலக்கைத் தாண்டியுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பணிப்பாளருமான சந்தன புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நிதி அமைச்சு, ஆரம்பத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வருவாய் இலக்கை 2,115 பில்லியன் ரூபாவாக நிர்ணயித்திருந்தது.

இது நவம்பர் மாதத்துக்குள் விஞ்சியது. இதனால் இலக்கு 2,231 பில்லியன் ரூபாவாக திருத்தப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

எனினும், திருத்தப்பட்ட இலக்கும் இப்போது மீறப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதியை மீண்டும் தொடங்கியமை, இலங்கை சுங்கத்தால் செயல்படுத்தப்பட்ட பல உள் நடவடிக்கைகளாலும் வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டின் வருவாய் இலக்கு ரூ. 1,531 பில்லியனாக ரூபாவாக இருந்தது.

வாகன இறக்குமதியை அனுமதிக்கும் முடிவின் அடிப்படையில் 2025 இலக்கு கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# 83,834 விவசாயிகளுக்கு இதுவரை இடர் இழப்பீடு!

கொழும்பு, டிசெ. 30

டித்வா சூறாவளியால் சேதமடைந்த நெல், பிற பயிர்களுக்கான மானியங்கள் மற்றும் இழப்பீட்டுத் தொகைகள் தொடர்பான அறிக்கையை விவசாயத் திணைக்களம் சமர்ப்பித்துள்ளது.

66,965 நெல் விவசாயிகளுக்கும், ஏனைய பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள 16,869 விவசாயிகளுக்கும் மானியங்களும் இழப்பீடுகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நெல் பயிர் செய்கைக்காக 66,965 விவசாயிகளுக்குச் சொந்தமான 33,215 ஹெக்ரேயர் நிலத்திற்கு 4,982 மில்லியன் ரூபா இழப்பீடாக செலுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நெல் பயிர்செய்கை இழப்பீட்டுக்கு சுமார் 50,000 ஹெக்ரேயர் நிலத்திற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கீகரிக்கப்படக்கூடிய அனைத்து விண்ணப்பங்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமைக்குள் முன் பணம் செலுத்தப்படும் என்றும் திணைக்களம் கூறியுள்ளது.

இதற்கிடையில், மேலதிகமாக உணவுப் பயிர்கள், மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடாக 16,869 விவசாயிகளுக்கு 670 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இதுவரை 3,708 ஹெக்ரேயர் நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ரணில், தேசபந்துவை விசாரிப்பதற்கு 3பேர் அடங்கிய மேல்நீதிமன்ற அமர்வு!

## சட்ட மா அதிபருக்கு முன்மொழிவு

கொழும்பு, டிசெ. 30

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்படவுள்ள வழக்குகளை மூவர் கொண்ட மேல்நீதிமன்ற அமர்வு முன் விசாரிக்கவேண்டுமென்று சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், சட்ட மா அதிபர் பரிந்த ரணசிங்கவிடம் முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

சட்ட மா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

நடந்து வரும் விசாரணைகளில் நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்வதற்காக சட்ட மா அதிபர் பரிந்த ரணசிங்கவின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. சட்ட மா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்கள் திலீப பீரிஸ் மற்றும் சுதர்ஷன டி சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2023 செப்ரெம்பரில் தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவுக்காக இங்கிலாந்துக்கு தனிப்பட்ட பயணமாக சென்றிருந்தபோது, 1.66 பில்லியன் அரசாங்க நிதி ரணிலால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக டிசம்பர் 31, 2023 அன்று மாத்தறை வெலிகமவில் உள்ள டபிள்யூ 15 ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட கொழும்பு குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவுக்கு எதிராக தொடர்புடைய வழக்குகளைத் தாக்கல் செய்வது குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்படவுள்ள வழக்குகளை மூன்று பேர் கொண்ட மேல்நீதிமன்ற அமர்வு முன் விசாரிக்க வேண்டும் என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இதன்போது பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்த விவகாரம் ஆய்வு செய்யப்படவேண்டும் என்றும் இதுவரை இது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் சட்ட மா அதிபர் கூறியுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் மூழ்கும் அபாயத்தில் வரலாற்று பாரம்பரியங்கள்


## அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை

நுவரெலியா, டிசெ. 30

கொத்மலையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க நியங்கந்தரா ராஜமகா விகாரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பல கிராமங்கள் நிலச்சரிவு மற்றும் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. மேலும், அரசாங்கம் உடனடி தீர்வுகளை வழங்க தலையிட வேண்டும் என்று உள்ளூர்வாசிகள் மற்றும் மகா சங்கத்தினர், அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளனர்.

டித்வா சூறாவளியால் நியங்கந்தரா ராஜமகா விகாரையில் உள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியாக சிறப்பு மிக்க பத்தினி யம்மா ஆலயம் முற்றிலும் நீரில் மூழ்கி அழிந்துள்ளது. கொத்மலை கிராமத்தின் பெருமையான இந்த பண்டைய இடத்தை மீட்டெடுக்க இது வரை எந்த முறையான திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. மேலும், அங்கு தொடர்ந்து வாழ்வது தங்கள் உயிருக்கு ஆபத்து என்று குடியிருப்பாளர்கள் கருதுகின்றனர். நிரந்தரமாக வாழ ஒரு பாதுகாப்பான இடம் அல்லது பிரச்னைக்கு நிரந்தர தீர்வை வழங்குமாறு மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இது குறித்து பேசிய நியங்கந்தர ராஜமகா விகாரையின் தலைமை விகாராதிபதி சிறீலங்காநந்த தேரர், இந்த நிலைமை கிராமத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை.

நியங்கந்தர விகாரை கொத்மலையின் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல். இன்று, இந்தப் பகுதி பாரிய நிலச்சரிவு ஏற்படும் அபாயத்தில் உள்ளது. இந்தப் பகுதி தொடர்ந்து மூழ்கினால், மேல் கொத்மலை நீர்மின் நிலையம் மற்றும் கீழே அமைந்துள்ள கீழ் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கும் இது கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இது ஒரு தேசிய பேரழிவின் முன்னோடியாகும்.- என்றார். (எ)

# சாய்ந்தமருதில் பிரதேச மட்ட, மாவட்ட கலை இலக்கிய விழா

சாய்ந்தமருது, டிசெ. 30

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய பிரதேச மட்ட மற்றும் மாவட்ட இலக்கிய விழா சாய்ந்தமருது பிரதேச பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ. எம். றிம்ஸான், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா உள்ளிட்டோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதி சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளில் சுமார் 48 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவம் வழங்கப்பட்டது.

இவர்களில் சாய்ந்தமருதில் உள்ள இலக்கியத்தில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல பிரிவினரும் அடங்கியுள்ளனர்.

இதன்போது, கலை நிகழ்வுகளில் பங்குபற்றிய 20 மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, கலை மன்றங்களுக்கான காசோலையும் வழங்கப்பட்டன. அத்துடன், பாசக்கவி பாயிஸ் கரீம் உட்பட இம்முறை 03 பேருக்கு "கலைஞர் சுவதம்" விருது வழங்கப்பட்டது. (எ)





# சம்பூரில் இந்தியாவுக்கு சொந்தமான ரொக்கட் பாகம் கரையொதுங்கியது

சம்பூர், டிசெ. 30

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்பூர் - மலைமுந்தல் கடற்பரப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தியாவுக்கு சொந்தமானதாக கருதப்படும் ரொக்கட்டின் பாகம் ஒன்று கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ரொக்கட்டின் பாகங்கள் திருகோணமலை கடற்பரப்பில் மிதந்து வந்த நிலையில் மாலையளவில் சம்பூர் - மலைமுந்தல் கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளதாகவும் குறித்த பகுதியில் இரு கடற்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விண்வெளிக்கு அனுப்பப்படும் ரொக்கட்டின் பாகங்களாக இருக்கலாம் எனவும் ரொக்கட் மேலெழுந்து செல்கின்றபோது கழன்று விழுகின்ற பாகங்களாக இவை இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# சாய்ந்தமருதில் நடைபெற்ற இளைஞர் எழுச்சி முகாம்

சாய்ந்தமருது, டிசெ. 30

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடத்திய இளைஞர்கள் எழுச்சி முகாம் - 2025 நிகழ்வு சாய்ந்தமருது இளைஞர் கழக சம்மேளன ஏற்பாட்டில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கான குழு விளையாட்டு மற்றும் படைப்பு திறன்களை வளர்த்து அதன் மூலம் தலைமைத்துவ திறன்களை வளர்த்து கொள்ளுங்கள் என்பதுடன் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப் பொருளை திசை திருப்பும் முறைகள், நவீன இளைஞர் யார்? போன்ற தலைப்புகளில் இந்த முகாம் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எச். யு. சுசந்த கலந்து கொண்டதுடன் விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ. முபாரக் அலி, அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. எம். சிறிவர்த்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் பங்குபற்றிய இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. (எ-06)

# பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, டிசெ. 30

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு மகா வித்தியாலயத்துக்கு முன்னால் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் மீட்கப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது இவ்வாறு சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தேற்றாத்தீவு கிராமத்தை சேர்ந்த 70 வயதுடைய சுப்பிரமணியம் நேசதுரை என அடையாளம் காணப்பட்டார்.

இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவை பெற்று மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# "மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்"

அக்கரைப்பற்று, டிசெ. 30

இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் அடித்தளமாக குழந்தைகள் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற வேண்டியது காலத்தின் அவசியமாக மாறியுள்ளது என்று அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ். எம். சபீஸ் தெரிவித்தார்.

"அரகலய" என அழைக்கப்பட்ட மக்கள் எழுச்சியை விடவும் வேகமாக, தற்போதைய சூழலில் ஒரு புதிய ஆன்மிக - சமூக எழுச்சி பரவி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-06)

# கண்டி நகர அபிவிருத்தி திட்டம்: வியாபாரிகள் வெளியேற்றம்

கண்டி, டிசெ. 30

கண்டி நகரை ஒழுங்கான நகரமாக மாற்றும் திட்டத்தின் முதற் கட்டமாகவே நடைபாதை வியாபாரிகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எடுத்த முடிவில் மாற்றம் இல்லை என்று கண்டி மாநகர சபை முதல்வர் சந்திரசிறி விஜயநாயக்க தெரிவித்தார்.

மாநகர சபை அதிகாரம், ஆளுநர், ஜனாதிபதி, பாராளுமன்றம், அமைச்சர்கள் என அனைத்தும் எமது பக்கம் இருக்கும் போது நாம் நிலை தடுமாறத் தேவையில்லை. எடுத்த முடிவில் மாற்றம் இல்லை.

எனவே, டிசெம்பர் 31ஆம் திகதி முதல் கண்டியிலுள்ள நடைபாதை வியாபாரிகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றார்.

நடைபாதை வர்த்தகம் காரணமாக சுற்றுலாப் பயணிகள் உட்பட பொதுமக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதுடன் நகரின் வனப்பும் குறைந்து வருகிறது. கண்டி நகரை ஒழுங்கான நகரமாக மாறறும் திட்டத்தின் முதற்கட்டம் இதுவாகும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போது...

அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பது கூட பயங்கரவாதச் செயலாக வரையறுக்கப்படலாம் என அவர் எச்சரித்தார்.

உதாரணமாக, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினாலோ அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்யக் கோரினாலோ, அவை பயங்கரவாதமாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட வாய்ப்புள்ளது. இது நாட்டைப் பாதுகாப்பதற்கான சட்டம் அல்ல, அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களை ஒடுக்குவதற்கான முயற்சி என்று அவர் சாடினார்.

தடுப்புக்காவல் உத்தரவுகளில் கையெழுத்திடும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய புபுது ஜயகொட, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அரசியல் நியமனதாரருக்கு நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்படுவது ஆபத்தானது-என்றார்.

மேலும், சட்டமா அதிபர் சந்தேக நபர்களுடன் "டீல்" பேசவும், வழக்குகளை 20 ஆண்டுகள் வரை இழுத்தடிக்கவும் இந்தச் சட்டம் வழிவகை செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையிலும், இராணுவம் வீடுகளுக்குள் புகுந்து சோதனை நடத்தும் அதிகாரம் பெறும். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர், எவருடைய கைபேசி மற்றும் குறுஞ்செய்திகளையும் நீதிமன்ற அனுமதியின்றி எப்போது வேண்டுமானாலும் பரிசோதிக்க முடியும். பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் போராட் டங்களுக்கு அழைப்பு விடுப்பவர்கள் பயங்கரவாதிக ளாக முத்திரை குத்தப்படலாம்.

அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் மக்களின் வசதிக்காக அல்ல, மாறாக அவர்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னர் தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் பல தசாப்தங்களாக நீடிப்பதைப் போல, இந்தச் சட்டமும் நிரந்தரமான அடக்குமுறையாக மாறும் என அவர் எச்சரித்தார்.

எனவே, ஜனநாயகத்திற்கு எதிரான இந்தச் சட்டத்தைக் கொண்டுவர மக்கள் அனுமதிக்கக் கூடாது என்றும், இதை முறியடிக்க அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார். (அ)

## டக்ளஸின்...

முன்னாள் ஆளுநருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர கட்சியின் கூட்டாட்சிகளில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்பொழுது மகர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அங்கு ஆயிரம் கைதிகள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டியபோதும் மூவாயிரத்துக்கும் அதிகமான கைதிகள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

ஆகவே முன்னர் பல தடவைகள் எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிர் ஆபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார். அவருக்கான பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்-என்றார். (அ)

## முன்னாள்...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையின்படி, கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த நவம்பர் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 7,506 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் 4,960 முறைப்பாடுகள் முறைப்பாட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 439 முறைப்பாடுகள் தொடர்பில் முறையான புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதிய ஆதாரங்கள் இல்லாமை அல்லது சட்ட வரம்பிற்குள் வராத காரணத்தினால் 2,145 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்காக 858 முறைப்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஊழலுக்கு எதிரான கள நடவடிக்கைகளில், இந்த ஆண்டு 119 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 61 நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைந்ததுடன், இதன் ஊடாக 76 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 35 பேர், பாடசாலை அதிபர் ஒருவர், மூன்று கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு பொது சுகாதார பரிசோதகர்கள் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் சிக்கியுள்ளனர். இது தவிர, விசேட விசாரணைப்பிரிவு, இரகசிய புலனாய்வுப் பிரிவு மற்றும் சொத்து விசாரணைப் பிரிவு மூலம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் முன்னாள் அமைச்சர்களான கெஹெலிய ரம்புக்வெல்ல (7 வழக்குகள் தொடர்பில்), எஸ்.எம். சந்திரசேன, பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட 51 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், இக்காலப்பகுதியில் 95 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் இலஞ்சம் தொடர்பான 61 வழக்குகளும், ஊழல் தொடர்பான 18 வழக்குகளும், விளக்க முடியாத சொத்துக் குவிப்பு தொடர்பான 13 வழக்குகளும் அடங்கும்.

இந்த வழக்குகளில் 35 பொலிஸ் அதிகாரிகள் உட்பட மொத்தம் 126 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, 67 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டதில் 41 பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் ஆகியோரும் அடங்குவர்.

தண்டப்பணம் மற்றும் அபராதங்கள் ஊடாக சுமார் 27 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான நிதி அரசு வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. தற்போது 287 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நிலையில், ஊழலுக்கு எதிரான இந்த போராட்டம் நாட்டின் நிர்வாகத் தூய்மையை உறுதிப்படுத்துவதில் முக்கிய மைல்கல்லாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# துளை - ஸ்பிரிங்வெலி பாலம் இறுதிக்கட்ட பணிகள் தீவிரம்!

கொழும்பு, டிசெ. 30

அண்மையில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்டு, போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்த பதுளை - ஸ்பிரிங்வெலி வீதியின் பாலத்திற்குப் பதிலாக, தற்காலிகமாக அமைக்கப்படும் பெய்லி பாலம் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இந்த வீதியானது, இப்பகுதி மக்களின் அன்றாடத் தேவைகளுக்கும், தோட்டத்துறையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கும் மிக முக்கியமான ஒரு பாதையாகும்.

கடந்த வாரம் ஏற்பட்ட அனர்த்தத்தினால் இந்தப் பாலம் பலத்த சேதமடைந்து முற்றாக அழிவடைந்திருந்தது. இதனால் அப்பகுதிக்கான பொதுப் போக்குவரத்து சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் பெய்லி பாலத்தின் கட்டமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகளை மிக விரைவாக நிறைவு செய்து, மக்களின் பாவனைக்காகவும் வாகனப் போக்குவரத்திற்காகவும் பாலத்தைத் திறந்து விட வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(அ)

## வெசாக்...

மதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரச நாட்காட்டியில் மே முதலாம் திகதி வெசாக் தினமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் அதற்குரிய நட்சத்திர பொருத்தம் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சாஸ்திர ரீதியான ஆலோசனைகளின்படி, சரியான நட்சத்திரம் கூடிவரும் மே 30 ஆம் திகதியை அதிகார பூர்வ வெசாக் தினமாக மாற்றியமைக்குமாறு மதகுருமார்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பண்டைய சாசன மரபுகளைப் பேணுவதற்காகவும், குழப்பங்களைத் தவிர்ப்பதற்காகவும் இந்தத் திருத்தம் அவசியமென அவர்கள் கருதுகின்றனர்.

எனவே, அன்றைய தினத்தில் சகல அரசு விழாக்களையும் மற்றும் சமய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## தமிழகத்தின்...

வைக்கப்பட்டுள்ளன.

ஆடைகள், உலர் உணவுப் பொருட்கள், பாதுகாப்பு உபகரணங்கள், மருந்துகள் மற்றும் சுகாதார மருத்துவ துவாய்கள் உள்ளிட்டவை இந்த நிவாரண கொள்கலன்களில் அடங்குகின்றன.

இந்தநிலையில், மக்களின் தேவைக்கருதி அடுத்த வாரத்தில் மேலும் ஒரு நிவாரண கொள்கலன் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## டித்வா...

ஜனவரி 15 ஆம் திகதிக்குள் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதங்களும் சொத்துச் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் அழைப்பாளர் சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அலட்சியப்போக்கு பொது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக இந்த மனுவில் வாதிடப்படவுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தண்டிக்கப்பட்டமை இந்த வழக்குக்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்படும்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தூரநோக்கற்ற ஆட்சியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் ஆதாரங்களாக முன்வைக்கப்படவுள்ளன.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உறவினர், ஒரு மதத் தலைவர் மற்றும் ஒரு தொழிலதிபர் ஆகியோர் சாட்சிகளாகப் பெயரிடப்பட உள்ளனர்.

ஜனாதிபதியின் செயலாளர், வளிமண்டளவியல் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்படவுள்ளனர்.

இந்த மனு தற்போது தயாராக இருப்பதாகவும், ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக இது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## மத்தள...

மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு அதிகமான விமான நிறுவனங்கள் மற்றும் பயணிகளை ஈர்ப்பதும் அதன் செயல்பாடுகளை மேம்படுத்துவதும் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். (அ)

## பல்கலை...

தலைவர் நியமனம் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை உடனடியாக திரும்பப் பெறாவிடின், தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் உபதலைவர் எம்.ஏ.எம்.சமீம் அறிவித்துள்ளார். (அ)

## 131 கிலோ...

தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## யாழ்...

இது தொடர்பாக சிறீலங்கா கிரிக்கெட் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமீபத்தில் நிலவிய டித்வா சூறாவளி காரணமாக கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இதன் காரணமாக 2026 ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறவிருந்த முதலாவது பரீட்சார்த்தப் போட்டி உட்பட திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களில் தடங்கல் ஏற்பட்டது.

தற்போது பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தும் 2026 ஐ.சி.சி. ஆண்களுக்கான இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடர் நிறைவடைந்த பின்னர் குறித்த பரீட்சார்த்தப் போட்டி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் மைதானத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய முடியும் என சிறீலங்கா கிரிக்கெட் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த சர்வதேச கிரிக்கெட் மைதானமானது 48 ஏக்கர் பரப்பளவில், 10 மத்திய ஆடுகளங்களுடன் அமைக்கப்படவுள்ளதுடன், மைதானத்தின் எல்லை தூரம் 80 மீற்றர்கள் வரை விரிவடையும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 138 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஒரு விளையாட்டு நகரத்தை உருவாக்கும் சிறீலங்கா கிரிக்கெட்டின் விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த மைதானம் நிர்மாணிக்கப்படுகிறது.

இலங்கையின் வட மாகாணத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதில் இந்த முயற்சி ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்பதுடன், இது சிறீலங்கா கிரிக்கெட்டின் தேசிய பாதை வேலைத் திட்டத்திற்கும் வலு சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கணக்காய்வாளர் நாயகம் நியமனத்தில் கடும் இழுபறி!

## ஜனாதிபதியின் பரிந்துரைகள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 30

**கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை அரசியலமைப்பு பேரவை தொடர்ச்சியாக நிராகரித்து வரும் நிலையில், மற்றுமொரு புதிய பெயரை ஜனாதிபதி விரைவில் பரிந்துரைக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

இது குறித்து ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி ஆனந்த விஜேபால கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில், "நாட்டுக்கு ஒரு கணக்காய்வாளர் நாயகம் அவசியம் என்பதை ஜனாதிபதி அறிந்துள்ளார்.

முன்னைய பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியான வேறொருவரின் பெயர் வரும் நாட்களில் முன்வைக்கப்படும்" என குறிப்பிட்டார்.

தேசிய கணக்காய்வு அலுவலகம் கடந்த டிசெம்பர் 7 ஆம் திகதி முதல் கணக்காய்வாளர் நாயகம் அல்லது பதில் கணக்காய்வாளர் நாயகம் இன்றி இயங்கி வருகின்றது.

இதற்கு முன்னர் ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட எச்.டி.பி. சந்தன, எல்.எஸ்.ஐ. ஜயரத்ன மற்றும் இராணுவத்தின் உள்வாரி கணக்காய்வுப் பணிப்பாளர் ஓ.ஆர். ராஜசிங்க ஆகியோரின் பெயர்கள் அரசியலமைப்பு சபையினால் நிராகரிக்கப்பட்டன.

இறுதியாக ஓ.ஆர். ராஜசிங்கவின் பெயர் பரிசீலனைக்கு வந்த போது, அதற்கு ஆதரவாக 4 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தநிலையில் ஜனாதிபதியின் பரிந்துரைகள் காரணமின்றி நிராகரிக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கவலை வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதி தகுதியானவர்களையே பரிந்துரைக்கிறார். ஆனால் சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் எவ்வித விளக்கமும் இன்றி அவற்றை எதிர்க்கின்றனர்" என அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாக இருப்பதால், பொது நிதி மேற்பார்வை மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் எச்சரித்துள்ளனர். (அ)

# 5 ஆம் இடத்தில் இலங்கை!

கொழும்பு, டிசெ. 30

2026 ஆம் ஆண்டில் ஆசியாவில் பார்வையிட சிறந்த சுற்றுலா தலங்கள் பட்டியலில், இலங்கை 5ஆவது இடத்தை பிடித்துள்ளது.

அமெரிக்காவின் பிரபல ஊடக நிறுவனமான அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கை இதனை வெளியிட்டுள்ளது.

மவுண்ட் பூஜி, டோக்கியோ, பலாவான், சியோல் போன்ற உலகப் புகழ்பெற்ற இடங்களுடன் இலங்கை இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

இந்த பட்டியலில்
1 ஆம் இடம் - ஜப்பானின் மவுண்ட் பூஜி,
2-ஆம் இடம் - டோக்கியோ,
3-ஆம் இடம் - பிலிப்பைன்ஸின் பலாவான்,
4-ஆம் இடம் - தென் கொரியாவின் சியோல்
5-ஆம் இடம் - இலங்கை.

அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கை நிறுவனம் செய்தி, நுகர்வோர் ஆலோசனைகள், உலகளாவிய தரவரிசைகள் மற்றும் ஆழமான பகுப்பாய்வுகளை வெளியிடும் ஒரு மதிப்புமிக்க அமெரிக்க ஊடக நிறுவனமாகும்.

ஆசியா குறித்து அந்த நிறுவனம், "உலகின் மிகப்பெரிய கண்டமான ஆசியா, தனித்துவமான அனுபவங்களை வழங்கும் எண்ணற்ற சுற்றுலா தலங்களை கொண்டது" என குறிப்பிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான இந்த தரவரிசை உள்ளூர் செலவுகள், அணுகல்திறன், உணவுவகைகள், சுற்றுலா இடங்களின் பல்வகைமை மற்றும் வாசகர்களின் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மழைக்காடுகள், அழகிய கடற்கரைகள் மற்றும் பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஆகியவை உலகத் தரத்தில் இருப்பதாக அந்த அறிக்கை பாராட்டுகிறது. மேலும், ஆசியாவின் பல பிரபல சுற்றுலா தலங்களில் காணப்படும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் கூட்டம் இன்றி, உயர்தர அனுபவங்களை இலங்கை வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க செய்திகள் மற்றும் உலக அறிக்கை இலங்கை தொடர்பில், "இந்தியாவின் தெற்கில் அமைந்துள்ள இலங்கை, மழைக்காடுகள், கடற்கரைகள் மற்றும் மற்றும் பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை கொண்ட ஒரு தீவு நாடு. சிறிய பரப்பளவு இருந்தாலும், 26 தேசிய பூங்காக்கள் உள்ளன. இங்கு யானைகள், சிறுத்தைகள், கரடிகள் போன்ற வனவிலங்குகளை பார்வையிட சுற்றுலா மேற்கொள்ளலாம். சிகிரியா கோட்டை, பொலன்னறுவை கோயில்கள் போன்ற வரலாற்று தலங்களும், தங்க நிற மணற்பரப்புகள் கொண்ட கடற்கரைகளும் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன." எனக் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அரச பல்கலைக்கழக விடுதிகளில் பாதுகாப்பு அலுவலர் பற்றாக்குறை!

கொழும்பு, டிசெ. 30

அரச பல்கலைக்கழக விடுதிகளில் போதுமான பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்படாதமையால், பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு வருவதாக அந்த விடுதிகளின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

விடுதிகளின் பாதுகாப்பு, தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் கடந்த ஆறு மாதங்களாக தேவையான எண்ணிக்கையில் பாதுகாப்பு அதிகாரிகள் பணியில் அமர்த்தப்படவில்லை.

இந்த நிலை காரணமாக மாணவர்கள் மற்றும் விடுதி நிர்வாகிகளும் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்கு பல முறை அறிவித் திருந்தாலும் இதுவரை உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை-என்றனர்.

அகில இலங்கை விடுதி துணை நிர்வாகிகள் சங்கத்தின் பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில்-

நாடு முழுவதும் உள்ள ஏழு அரச பல்கலைக்கழகங்களில் சுமார் 200 வெளிப்புற மற்றும் உட்புற விடுதிகள் உள்ளன. அவற்றின் பாதுகாப்புக்காக அந்தந்த பல்கலைக்கழகங்கள் தனியார் நிறுவனங்களை தெரிவு செய்துள்ளன.

பெண் விடுதிகளுக்கு ஒரு ஆண் மேற்பார்வையாளரும், பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும், ஆண் விடுதிகளுக்கு ஆண் மேற்பார்வையாளரும் நியமிக்கப்படவேண்டும் என்ற வகையில் பல்கலைக்கழகங்களும், தனியார் நிறுவனங்களும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

ஒரு பாதுகாப்பு அதிகாரி தினசரி 12 மணித்தியாலங்கள் பணி நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக 24 மணி நேரம் தொடர்ச்சியாக பணியாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருவர் 12 மணித்தியாலங்கள் பணியை முடித்த பின்னர் வேறு அதிகாரியை நியமிக்க பாதுகாப்பு நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அத்துடன் ஒரு துணை நிர்வாகிக்கு மூன்று விடுதிகளின் பொறுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள் இல்லாமை காரணமாக மாணவர்களின் ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது உள்ளிட்ட பல பிரச்னைகள் எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# சுற்றுலாத்துறையிலும் வரலாற்றுச் சாதனை!

கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் 2025 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2018 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை முறியடித்து சாதனை படைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் உலகளாவிய சவால்களைத் தாண்டி, இலங்கை மீண்டும் சர்வதேச பயணிகளின் சொர்க்கபுரியாக மாறியுள்ளதை புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன்படி 2018 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த 2,333,796 சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2025 ஆம் ஆண்டு முறியடித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு முழுவதிலும் 2,053,465 பயணிகளே வந்திருந்த நிலையில், இந்த ஆண்டு அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளது.

இந்தநிலையில் ஆண்டின் தொடக்கத்திலேயே அதிகபட்சமாக 252,761 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்து ஒரு பலமான அடித்தளத்தை இட்டுள்ளனர்.

இதனையடுத்து செப்ரெம்பர் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 30.2 வீத மாதாந்த வளர்ச்சி விகிதம் பதிவாகியுள்ளது.

இதுவே இந்த ஆண்டின் அதிகபட்ச மாதாந்த வளர்ச்சி விகிதமாகும். மேலும் டிசெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை உச்சத்தை எட்டியுள்ளது.

டிசெம்பர் மாதத்தில் 25 நாட்களில் மாத்திரம் 195, 394 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதிலும் டிசெம்பர் 25 ஆம் திகதி மாத்திரம் 11,111 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

இது 2025 ஆம் ஆண்டில் ஒரே நாளில் பதிவான அதிகப்படியான வருகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் சிறை அதிகாரி கைது!

கொழும்பு, டிசெ. 30

2009 ஆம் ஆண்டில் களுத்துறை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வஸ்கடுவ - பனாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி களுத்துறை சிறைச்சாலையில் 6 கைதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்த வருடத்தில் இதுவரை 2,545 வீதி விபத்துகள் பதிவு!

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 2,545 வீதி விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யு. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் வீதி விபத்துக்களால் 2,692 பேர் உயிரிழந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் அதிகளவான வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அதன்படி, 2024 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் வீதி விபத்துக்கள் 272 ஆக அதிகரித்துள்ளதுடன் உயிரழப்புக்களின் எண்ணிக்கை 317 ஆக உயர்வடைந்துள்ளன-என்றார். (அ)

# போதைப்பொருளுடன் நால்வர் கைது!

கொழும்பு, டிசெ. 30

200 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 20.7 கிலோகிராம் "குஷ்" ரக போதைப்பொருளுடன் 4 இலங்கையர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் பாங்கொக்கிலிருந்து இந்தியா ஊடாக இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் 2 ஆண்களும், 2 பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.